8th September 1970]

டர் பிடித்து டிக்கெட் கேட்கிற நேரத்தில் அவர்கள் தாக்கக் கூடிய அளவில் சம்பவங்கள் நடக்கின்றன. அம்மாதிரிச் சம்பவங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு, கண்டக்டர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதால், இந்த மாதிரி பீக் அவரில் ஒவ்வொரு பஸ்ஸிலும் ஒரு போலீஸ்காரரை அனுப்புவதுபற்றி அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பஸ்ஸில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்கிற ஒருவர் அப்படித் தாக்குவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அப்படிச் சொல்லுவது மக்களைப்பற்றிக் குறை கூறுவதாகும். தவறிப்போய் டிக்கெட் வாங்காமல் இருக்கலாமே தவிர, வேண்டுமென்றே இருக்கமாட்டார்கள். அப்படி இருந்தாலும், கேட்கும்போது ஆட்சேபணை செய்யமாட்டார்கள். உடனே பணத்தைக் கொடுத்துவிடுவார்கள். ஏற்கனவே இருக்கிற நெருக்கடியோடு இன்னும் ஒரு போலீஸ்காரரையும் சேர்த்து அனுப்புவது சரியாகாது. நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும். மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் சுமுக உறவு நிலவும்படி செய்வார்கள் என்று கருதுகிறேன்.

Motor cars

*88. *Q.*—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Public Works be pleased to state the names of M.L.As. & M.L.Cs. to whom motor cars were allotted from the Tamil Nadu Government Quota during the financial years 1969-70 and 1970-71 (till date) ?

மோட்டார் கார்கள்

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

1969-1970, 1970-1971-ஆம் நிதி ஆண்டுகளில் (இன்று வரை) தமிழ்நாடு அரசு பங்கீட்டிலிருந்து எந்தெந்த சட்ட மன்ற, பேரவை உறுப்பினர்களுக்கு மோட்டார் கார்கள் (Motor Cars) ஒதுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பேரவை முன் விவர அறிக்கை (†) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Surplus lands

*76. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state : 4-30 p.m.

(*a*) the number of acres of the surplus lands that have been so far taken over by the Government under the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 ; and

(*b*) the number of acres that have been so far handed over to the tenants by the Government ?

†Printed as Appendix II.

உபரிநிலங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1961-ஆம் ஆண்டு தமிழ் நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு வரையறை) சட்டத்தின் கீழ் அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட உபரி நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(இ) அரசால் குத்தகைக்காரர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 20,440 ஏக்கர்கள்.

(இ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (உபரி நிலம் முடிவு செய்தல்) விதிகள், 1965யில் ஐந்தாம் விதியின்படி, 16,633 ஏக்கர் தகுதியுடைய வர்களுக்கு உரிமை செய்யப்பட்டது. (மேற்படி ஐந்தாம் விதியின்படி உபரி நிலங்களை உரிமை செய்வதில் குடியானவர் தனிப்பிரிவாக அமையவில்லை.)

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த வகையில் மொத்தமாக வரக்கூடிய உபரி நிலங்கள் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விவரம் பழைய நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகும். புதிய நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் கணக்கிடப் பட்டதல்ல. ஏனெனில் புதிய நிலச் சீர்திருத்தச் சட்டம் இன்னும் அமுலுக்கு வரவில்லை. முதலில் 83,000 ஏக்கர் நிலம் உபரி நிலமாக இந்தச் சட்டத்தின் அடிப்படையில் கிடைக்கும் என்று கணக்கிடப் பட்டது. ஆனல் மிகவும் பக்கத்தில் போய் இதைப்பற்றிய கணக்கைப் பார்க்கிறபோது, அது 65,000 ஏக்கராகக் குறைந்தது. இந்த 65,000 ஏக்கர் நிலத்திலிருந்து இதுவரையில் 'நோட்டிபை' செய்யப்பட்டது 26,453 ஏக்கர்களாகும். மீதியுள்ள நிலத்தில் 30,000 ஏக்கர்களைப் பொறுத்தவரையில், வழக்குகள் 'ரிட், ரிட் அப்பீல், ரிவிஷன்கள்' என்பவைகளின் அடிப்படையில் 'லேண்டு டிரிபியூனல்களில்' போடப் பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் இன்னும் தாவாக்கள் நிலைமை யிலேயே இருக்கின்றன. மீதியுள்ள நிலங்களைப் பொறுத்தவரையி லும், விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. மொத்தத்தில் நம் முடைய 'பொசஷனுக்கு' வந்தது 20,440 ஏக்கர்கள் என்றாலும், 3,000 ஏக்கரைப் பொறுத்தவரையில், ஸ்டே ஆர்டர்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. அதுபோக மீதி தான் 17,440 ஏக்கர். அதிலும் 16,633 ஏக்கர்கள்தான் இது வரையிலும் ''அசைன்'' செய்யப் பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : 30,000 ஏக்கர் நிலங்களைப் பொறுத்த வரையில், வழக்கு மன்றங்களில் வழக்குகள் இருப்பதாகவும், அரசாங் கம் எடுத்துக்கொள்ளும் நிலையில் 35,000 ஏக்கர் நிலம் இருப்பதாகவும் தெரிகிறது. இதிலும் 16,633 ஏக்கர் நிலங்கள்தான் தகுதி உள்ளவர் களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக இருக்கிறது. இந்த நிலைமையில்

புதிய ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவருவதற்கான அவசியம் என்னவென்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கணக்கு விவரம் இங்கே சரியாக என்னிடமில்லை. 26,000 ஏக்கர் நிலங்களைப் பொறுத்த வரையில்தான் 'நோட்டிபை' செய்யப்பட்டிருக்கின்றன. அது போக 30,000 ஏக்கர் நிலங்களைப் பொறுத்தவரையில், வழக்கு மன்றங்களில் ''ரிட்'' மூலமாகவும் ''ரிட் அப்பீல்கள்'' மூலமாகவும் வழக்குகள் இருக்கின்றன. இதெல்லாம் போக இருப்பது ஒரு 9,000 ஏக்சர் நிலங்கள் தான். அவைகளைப் பொறுத்தவரையில் விசாரணை நடை பெற்றுக் கொண்டிருக்கும் கட்டம் இருக்கிறது. அதுவுமல்லாமல்

Even after the notification of surplus lands, many landowners filed writs and appeals and got stay orders covering an extent of 4,694 acres. Excluding a small extent on which there are standing crops, an extent of 20,440 acres was taken possession of.

Even after taking possession, revisions and appeals were filed and stay orders obtained regarding 3,014 acres (pending notices 1,673 acres). Out of the remaining extent of 17,426 acres readily available for assignment, orders of assignment have actually been issued for 16,633 acres. So, the Government are not at fault.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டப்படி, எதிர்பார்க்கப் பட்ட உபரி நிலங்கள் மொத்தம் 83,000 ஏக்கர்கள் என்று குறிப் பிட்டார்கள். ஆனும் 'கிட்டே நெருங்கிப் பார்க்கிறபோது' அது 65,000 ஏக்கர்களாகக் குறைந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்கள். எஞ்சியுள்ள 18,000 ஏக்கர்கள் என்னவாயிற்று என்று அறிய விரும் புகிறேன். அத்துடன் 65,000 ஏக்கர்களில் 20,000 ஏக்கர்கள்தான் 'அக்கொயர்' செய்யப்பட்டிருக்கின்றன. 30,000 ஏக்கர்களைப் பொறுத்த வரையில் வழக்கு மன்றங்களில் வழக்குகள் இருக்கின்றன என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். மிஞ்சிய 15,000 ஏக்கர் நிலங்கள் என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் மேலோட்டமாகத் தான் இங்கே குறிப்பிட்டேன். இவைகளையெல்லாம் சரியாகக் கணக் கிட்டால், மொத்தத்தில் சரியாக வந்துவிடும். பல ஏக்கர் நிலங்களைப் பொறுத்தவரையில், ரிட்களும், ரிட் அப்பீல்களும், என்கொயரிகளும் நடைபெற்றுவருகின்றன. சிலவற்றைப் பொறுத்தவரையில், தடை போட்டிருக்கிறார்கள். சட்ட நுணுக்கங்களும் குறைபாடுகளும் நிலச் சுவான்தாரர்களுக்கு மிகவும் அதிகமாகத் தெரிந்திருக்கிற காரணத்தால், நாம் நேராகப் போனுல் கூட அதையும் முறியடிக்க சட்டத்தின் சன்னிதானத்தில் அவர்களுக்கு முடிகிறது.

[8th September 1970

திரு. கே. ராஜாராம் : இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேறி கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாயினும், இதன் கீழ், 83,000 ஏக்கர் உபரி நிலங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்து, பிறகு 65,000 ஏக்கர்தான் கிடைக்கும் என்று எதிர்பார்த்து, அதிலும் உண்மையில் கைக்குக் கிடைத்தது 26,000 ஏக்கர் நிலங்கள் வரைதான் பகிர்ந் தளிக்கப் படக்கூடியதாகக் கணக்கிட்டு, அதிலும் 16,000 ஏக்கர் நிலங்கள் தான் இதுவரை விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. 10 ஆண்டுகளாகியும்கூட இதைச் சரியாக அமுல்படுத்தாத நிலையைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா? இப்போது எதற்கும் கோர்ட்டுக்குச் சென்று ஒரு 'ஸ்டே' வாங்கிவிடுகிறார்கள். எனவே இந்த நிலையைத் தவிர்க்க ஹைக்கோர்ட்டைக் கலந்தாவது ஒரு ஸ்பெஷல் கோர்ட் ஒன்றை இதற்காகவே நியமிப்பது குறித்து ஆராயுமா? 83,000 ஏக்கரானாலும் சரி அல்லது அரசாங்க எஸ்டிமேட் படி எதிர்பார்க்கப்படுகிற 65,000 ஏக்கர் நிலமானாலும் சரி, அவைகளை இனியும் காலதாமதமின்றி கைப்பற்ற அரசாங்கம் முன்வருமா? இதற்காகத் தனியாக ஒரு ஸ்பெஷல் கோர்ட் நியமிப்பதில் தவறில்லை. எத்தனையோ ரெவின்யூ கோர்ட்டுகளையெல்லாம் நியமிக்கிறோம். அதைப் போல் இந்த விஷயத்தில் வழக்குகளை உடனுக்குடன் தீர்த்துவைக்க உயர் நீதிமன்றத்தைக் கலந்தாவது ஒரு ஸ்பெஷல் கோர்ட்டு வைப்பது நல்லது. இந்த நிலங்களைப் பொறுத்தவரையில், இப்போது பல விதமான கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே அதற் கெல்லாம் இடமில்லாமல் உடனடியாக இந்த நிலத்தை விநியோகிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் யோசனை மிக நல்ல யோசனை. ஹைக் கோர்ட்டைக் கலந்துகொண்டு இதைப்பற்றி யோசித்து வழக்குகளை விரைவுபடுத்துமாறு கூட கேட்டுக் கொள்ளலாம்.

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதி லளிக்கும்போது, தகுதியுள்ளவர்களுக்கு உபரி நிலங்கள் வழங்கப்பட்டி ருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். தகுதி என்பது எந்த அடிப் படையில், யாரால் நிர்ணயிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தகுதி என்பது அரசாங் கத்தாலோ, கட்சிக்காரர்களாலோ நியமிக்கப்படுவதில்லை. தமிழ் நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் இந்தத் தகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. அதில் 7, 8 முறைகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவைகளின் அடிப்படையில் தான் தகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. குறிப்பாக அதில் என்ன சொல்லப்பட்டிருக் கிறது என்றால்

Surplus lands have been assigned to persons under the Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965. Under the rules—

(*i*) A person who is completely dispossessed of his holding, by virtue of the provisions of the Act or as a result of execution of any irrigation or hydro-electric project.

8th September 1970]

(*ii*) A person whose extent of holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant, by virtue of the provisions of the Act.

(*iii*) A person who is, or who has been, a member of the Armed Forces.

(*iv*) A co-operative farming society, the members of which are landless agricultural labourers or landless persons or a combination of both.

Provided that the extent of land assigned to the Society, together with the land, if any, already held by the society, does not exceed the ceiling area of such society.

(*v*) A landless agricultural labourer, who is likely to engage himself in direct cultivation.

(*vi*) A landless person, who is likely to engage himself in direct cultivation.

(*vii*) A cultivating tenant who is holding land which is less than five standard acres in extent.''

THIRU G. SWAMINATHAN : May I know, Sir, whether they are standard acres or ordinary acres ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : They are standard acres.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இம்மாநிலத்தில் உபரி நிலங்கள் எந்த எந்த விவசாயியிடம் எவ்வளவு எவ்வளவு இருக்கின்றன என்று கணக்கெடுக்கும் வேலையே இன்னும் முடிந்தபாடாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தாலுக்காவை அடுத்த தாலுக்காவான பழனி தாலுக்காவில் நிலச்சுவான்தார் ஒருவருக்கு எங்கே எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றிய விவரம் செஜட்டில் வருவதை நான் கண்டேன். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அவருக்கு இருக்கின்றன. உடுமலேப்பேட்டையிலும், பொள்ளாச்சியிலும், இன்னும் அந்த ஜில்லாவில் உள்ள பல தாலுக்காக்களிலும் உள்ள நிலச்சுவான்தாரர்கள் அவர்கள் நிலத்தை ''நாங்கள் ஒப்படை செய்யத் தயாராக இருக்கிருேம், அரசாங்கம் எப்போது அதற்கான பணத்தைக் கொடுக்கும்?'' என்று நான் விசாரித்தமட்டில் அவர்கள் சொல்லுகிருர்கள். ஆகவே உபரி நிலங்கள் மாநிலத்தில் எவ்வளவு இருக்கின்றன எனறு சட்டப்படி தெரிவிக்கும் ஏற்பாடுகள் மிகவும் தாமதமாக நடைபெற்று வருகின்றன என்று தெரிகிறது. ஆகவே அதைத் துரிதப்படுத்த அரசாங்கம் வழிவகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த உபரி நிலங்கள் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயித்த பிறகு கிடைக்கும் உபரி நிலங்கள் பற்றியவையாகும். அந்தச் சட்டத்தின் விதிகளிலிருந்து தப்பிப்போவதற்காக டெய்ரி என்றும், பால் பண்ணை என்றும் பல ஏக்கர் நிலங்களைக் காட்டி வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது நெய்க்காரப்பட்டியாக இருக்கும் என்று நினைக் கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து தப்புவதற்காக டெய்ரி பார்ம், மேய்ச்சல்காடு என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப் போது நாம் கமிட்டியில் ஆலோசித்துக் கொண்டிருக்கும் முறைகளை யெல்லாம் அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். எனக்குச் சரியாக நினைவிருந்தால், அதற்கு ''நரேந்திரா டெய்ரி பார்ம்'' என்று பெயர். அங்கெல்லாம் பால் பண்ணை என்று போர்டு தான் இருக்குமே தவிர, வேறொன்றும் இருக்காது. இதற்காக 500 ஏக்கர் வைத்திருப்பார்கள். மாடு இருக்காது. ஆனாலும் அந்த நிலங்கள் எல்லாம் விதிவிலக்கின் அடிப்படையில் தப்பித்துக் கொண்டிருந்தன. அதைப்பற்றித்தான் நாம் இப்போது கமிட்டி போட்டு ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். அது பற்றிய விதி விலக்குகளில் எவை எவைகளை வைத்துக் கொள்ள லாம், எதையெதையெல்லாம் கொஞ்சம் குறைக்கலாம் என்பதுபற்றி எல்லாம் கூட இப்போது மன்றத்தின் முன்னாலே வந்துகொண்டிருக் கின்றன.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : இதுவரை வழங்கப்பட்ட உபரி நிலங்களில் பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர் என்று மாவட்ட வாரியாக அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : என்னிடம் இப்போதிருக்கிற விவரமெல்லாம் மொத்தம் 16,000 ஏக்கர் நிலங்கள் விநியோகிக்கப் பட்டிருக்கின்றன என்பது தான். அதை எத்தனை குடும்பங்களுக்கு அளித்திருக்கிறார்கள் என்ற கணக்கு விவரம் இல்லை. அந்தக் குடும் பங்களின் எண்ணிக்கை நிலங்களை விட கண்டிப்பாகக் குறைவாகத் தான் இருக்கும்.

Raffle tickets

*77. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) the amount for which Tamil Nadu Raffle Tickets were sold in other States so far ; and

(*b*) the amount so far disbursed to persons of other States by way of prizes ?

பரிசுச் சீட்டுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு அரசுப் பரிசுச் சீட்டுகள் இதுவரையில் ஏனைய மாநிலங்களில் எவ்வளவு தொகைக்கு விற்கப்பட்டுள்ளன ?

(இ) ஏனைய மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரையில் பரிசாக வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?